வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 22.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மத்திய அரசின் பட்ஜெட், முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் கனவை நனவாக்குவதற்கான அடித் தளமாக அமையும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 26-ஆம் தேதி லடாக் சென்று, 25-ஆவது கார்கில் வெற்றி தினவிழாவில் கலந்து கொள்கிறார்.

நாட்டில் வேலை வாய்ப்பின்மை விகிதம், அண்மைக் காலங்களில் குறைந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களின் உணவு முறை குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் சார்பில் புதுச்சேரியில் கணக்கெடுப்பு மேற்கொள்ளும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

மோடி-பட்ஜெட்-

நாடாளுமன்றத்தில் நாளை தாக்கல் செய்யப்பட உள்ள மத்திய பட்ஜெட் அடுத்த 25 ஆண்டுகளுக்கான நாட்டின் பயணத்திற்கு திசை காட்டுவதாகவும் 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் கனவை நனவாக்குவதற்கான அடித் தளமாகவும் அமையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கும் முன்பாக நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர் மக்களவை தேர்தலில் மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டதால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு, அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து, நாட்டிற்காக போராட வேண்டும் என்றார். எதிர்கட்சிகள் தங்களின் தோல்விகளை மறைக்கும் முயற்சிக்கு நாடாளுமன்ற நேரத்தை பயன்படுத்துவதாகவும் இத்தகைய எதிர்மறை அரசியலை இவர்கள் கைவிட வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார். நாடாளுமன்றத்தின் முந்தைய அமர்வில் தமது குரலை

அடக்க, எதிர்கட்சிகள் முயன்றதாக அவர் குறிப்பிட்டு, ஜனநாயகத்தில் இத்தகைய தந்திரங்களுக்கு இடமில்லை என்றார். தமது அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை, கள அளவில் நிறைவேற்றும் திசையில் முன்னேறி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் பெருமிதமான ஜனநாயக பயணத்தில், முக்கிய மைல் கல்லாக பட்ஜெட் கூட்டத் தொடர் அமையும் என பிரதமர் கூறினார். அடுத்த அரசியில் போருக்கு தேர்தல் ஆண்டான 2029- வரை அவகாசம் இருப்பதால், விவசாயிகள், இளைஞர்கள் உட்பட அனைத்து தரப்பினரின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதில் அனைத்து கட்சிகளும் பங்கேற்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

*நாடாளுமன்றம்*

நாடு முழுவதும் சுமார் 4 ஆயிரத்து 700 மையங்களில் நீட் யுஜி தேர்வு நடைபெற்றதில் பட்னா அருகே ஓரே ஒரு இடத்தில் மட்டுமே கேள்வித் தாள் கசிவு இருந்ததாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்தி பிரதான் கூறி உள்ளார். இதுகுறித்து சிபிஐ விசாரித்து வருவதாகவும், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு

நிலுவையில் இருப்பதாகவும் அவர் இன்று மக்களவையில் துணை கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் கூறினார். முன்னதாக எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி அவையில் இப்பிரச்சனையை எடுத்துப் பேசுகையில் நாட்டின் தேர்வு முறையில் தீவிரப் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். லட்சகணக்கிலான மாணவர்கள், தேர்வு குறித்தும் தங்களின் எதிர்காலம் குறித்தும் மிகுந்த கவலை அடைந்திருப்பதாக அவர் கூறினார். சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த திரு அகிலேஷ் யாதவ் உட்பட வேறு சில எதிர்கட்சி எம்பிக்களும், கேள்வித் தாள் கசிவு குறித்து, அவையில் பிரச்சனை எழுப்பினர்.

நாடாளுமன்ற கூட்டத் தொடரின் முதல் நாளான இன்று, மாநிலங்களவையில், கேள்வி நேரம், பூஜ்ய நேரம், மற்றும் உறுப்பினர்களின் சிறப்பு குறிப்புகளுக்கு பின்னர் அவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக அவை இன்று காலை கூடிய போது, கன்வர் யாத்திரைப்

பிரச்சனை பற்றிய எதிர்கட்சிகளின் ஒத்தி வைப்பு தீர்மானங்களுக்கு அனுமதி அளிக்க அவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் மறுப்பு தெரிவித்தார்.

*யாத்திரை*

உத்தரபிரதேஷ் மற்றும் உத்தராகண்டில் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வதற்காக கங்கையில் புனித நீர் எடுத்து வருவதற்கான **கன்வர் யாத்திரை** என்னும் காவடி **யாத்திரைப் பாதை** நெடுகிலும், உணவகங்களில் உரிமையாளர்கள் தங்களின் பெயர்களை எழுதி வைக்க வேண்டும் என மாநில அரசுகளால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு இன்று உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. ஆயினும் உணவகங்களில் எவ்விதவிதமான உணவு பரிமாறப்படுகிறது என்பதை, எழுதி வைக்கத்தான் வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

*மோடி-கார்கில்*

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 26-ஆம் தேதி லடாக் சென்று, 25-ஆவது கார்கில் வெற்றி தினவிழாவில் கலந்து

கொள்கிறார். இவ்விழா, வரும் 24 முதல் 26-ஆம் தேதி வரை, கார்கில் மாவட்டம் டிராஸ் பகுதியில் நடைபெறும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. டிராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர் நினைவுச் சின்னத்திற்கு பிரதமரின் வருகை விழாவின் முக்கிய பகுதியாக அமைய உள்ளது. பிரதமர், போர் நினைவுச் சின்னத்தில் மலர் அஞ்சலி செலுத்திய பின்னர், அங்குள்ள புகழ்ச் சுவர் மற்றும் கார்கில் போர் அருங்காட்சியகத்தையும் பார்வையிடுகிறார். பிரதமரின் வருகைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை லடாக் துணை நிலை ஆளுநர் டாக்டர் பிடி மிஷ்ரா, வரும் 24-ஆம் தேதி நேரில் சென்று பார்வையிடுவார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

கேள்வி பதில்

நாட்டில் வேலை வாய்ப்பின்மை விகிதம், அண்மைக் காலங்களில் குறைந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. வருடாந்திர தொழிலாளர் சக்தி கணக்கெடுப்பு முடிவுகளின் படி, 15 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான வேலை வாய்ப்பின்மை விகிதம் கடந்த 3 ஆண்டுகளில் முறையே, 4.2, 4.1 மற்றும் 3.2

சதவிகிதமாக குறைந்து இருப்பதாக, மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் திருமதி ஷோபா கரந்தலஜே இன்று மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதில் ஒன்றில் தெரிவித்தார்.

பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 2 கோடியே 8 லட்சம் கைவினைக் கலைஞர்கள் பதிவு பெற்றுள்ளதாக, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி மக்களவையில் கேள்வி நேரத்தின் போது கூறினார்.

ஜல்சக்தி துறை இணை அமைச்சர் திரு வி சோமன்னா மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில், ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் இதுவரை 11 கோடியே, 75 லட்சம் வீடுகளுக்கு குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

*சூரிய மின்சாரம்*

பிரதமரின் சூர்ய கர்-இலவச மின்சார திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையில் மின் நுகர்வோர் வீடுகளின் மேற்கூரையில் சூரிய சக்தி மின் உற்பத்தி வசதிகளை அமைத்துக் கொடுக்கும் மின்சார விநியோக நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான அமலாக்க வழிமுறைகளை, மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது. வீடுகளில் சூரியசக்தி மூலமான மேற்கூரை மின் உற்பத்தி வசதிகளை அதிக அளவில் நிறுவுவதன் மூலம், மின்நுகர்வோர் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தை தாங்களே தயாரித்துக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்திலான பிரதமரின் சூரிய கர் திட்டம் மொத்தம் 75 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2026-27-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படுகிறது. மாநில அளவில் இத்திட்டத்திற்கான அமலாக்க ஏஜன்சிகளாக மின் விநியோக நிறுவனங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கணக்கெடுப்பு

நாட்டு மக்களின் உணவு முறை குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய ஊட்டச் சத்து நிறுவனம் சார்பில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கணக்கெடுப்பு மேற்கொள்ளும் பணிகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். 2023-ஆகஸ்டு மாதம் முதல் 3-கட்டங்களாக மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வு ஏற்கனவே 24 மாநிலங்களில் முடிந்து விட்ட நிலையில் தற்போது புதுச்சேரி உட்பட, எஞ்சி உள்ள யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் 4 பிராந்தியங்களுக்கு உட்பட்ட 50 வார்டுகள் மற்றும் கிராமங்களில் இந்த கணக்கெடுப்பு நடைபெறும். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் கணக்கெடுப்பை முதலமைச்சர் தொடக்கி வைத்த போது, அரசுச் செயலர் டாக்டர் முத்தம்மா மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இயக்குநர் செல்வி முத்து மீனா, ஐசிஎம்ஆர் தேசிய ஊட்டச் சத்து நிறுவனத்தைச் சேர்ந்த மூத்த

ஆராய்ச்சியாளர் டாக்டர் ஆனந்தன், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*ரங்கசாமி-வீடு*

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 107 பயனாளிகளுக்கு முதல் தவணை உதவியாக தலா 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கும் பணிகளை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். சட்டப் பேரவையில் முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியல் சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் திரு இளங்கோவன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*வாணிதாசன்*

கவிஞரேறு வாணிதாசனார் பிறந்த நாள் இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. பாரதி பூங்காவில் அமைந்துள்ள வாணிதாசனார் சிலைக்கு, பொதுப்

பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்ற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*வானிலை*

மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்றைய தினம் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், மணிக்கு 40 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில் வலுவான தரைக் காற்று வீசக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 28-ஆம் தேதி வரை மழை வானிலை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

*அறிவுசார் சொத்து*

தெற்குலக நாடுகளில், அறிவுசார் சொத்துக்கள், புதுமையாக்கம் மற்றும் தொழில் முனைவை ஊக்குவிப்பதற்கான கூட்டுத் திட்டங்களை ஒருங்கிணைந்து உருவாக்குவது குறித்து,

நிதி ஆயோக், உலக அறிவுசார் சொத்துக்கள் அமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதுதொடர்பான புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரப் பிரதான் தலைமை விருந்தினராக பங்கேற்றுப் பேசுகையில் புதுமைப் படைப்புகளை உருவாக்குவதில் இந்தியாவின் சிறந்த நடைமுறைகளை இதர நாடுகளுக்கு வழங்க இதனால் ஏதுவாகும் என்றார். அறிவுசார் சொத்துரிமையின் முக்கியத் துவத்தை பள்ளி நிலையில் இருந்தே இளைஞர்களுக்கு புரிய வைக்கவும், அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த வளர்ச்சியை மேம்படுத்தவும் இந்த உடன்பாடு உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

*பத்ம விருது*

நாட்டின் உயரிய சிவிலியன் விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகளுக்கு, ராஷ்டிரிய புரஸ்கார் இணையதளம் மூலம், பெயர்களை பரிந்துரைக்கும் நடைமுறைகள், செப்டம்பர் 15-ஆம் தேதி வரை திறந்திருக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சகம்

தெரிவித்துள்ளது. 1945-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பத்மவிபூஷன், பத்மபூஷன் மற்றும் பத்ம ஸ்ரீ விருதுகள் ஆண்டு தோறும் குடியரசு தினத்தை ஒட்டி அறிவிக்கப்படுகின்றன. கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை, அறிவியில், பொறியியல், தொழில் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் தனிச் சிறப்பான சாதனை புரிந்தவர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மத்திய அரசின் பட்ஜெட், முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் கனவை நனவாக்குவதற்கான அடித் தளமாக அமையும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 26-ஆம் தேதி லடாக் சென்று, 25-ஆவது கார்கில் வெற்றி தினவிழாவில் கலந்து கொள்கிறார்.

நாட்டில் வேலை வாய்ப்பின்மை விகிதம், அண்மைக் காலங்களில் குறைந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களின் உணவு முறை குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் சார்பில் புதுச்சேரியில் கணக்கெடுப்பு மேற்கொள்ளும் பணிகளை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------